# களனிப் பல்கலைக்கழகம்

# வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக 2026 செப்டெம்பர் 28ஆம் திகதி வரை பொருத்தமான தகைமை வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை களனி பல்கலைக்கழகம் கோருகின்றது.

1. மின்னியலாளர் பதவி - (ஒப்பந்தம்)
   Post of Electrician
2. குழாய் வேலையாளர் (ஒப்பந்தம்)
   Post of Plumber
3. தச்சர் பதவி (ஒப்பந்தம்)
   Post of Carpenter

- **தகைமைகள்**

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பதவியின் வேலைகளுடன் தொடர்புடைய வகையில், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்கல்விப் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும், தேசிய தொழிற்கல்வித் தகுதி (NVQ) 4ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**சம்பளம்**

அடிப்படைச் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ரூபா 62,974.00 ரூபா மாதாந்த சம்பளம் வழங்கப்படும். பல்கலைக்கழக விதிகள் மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் ஏற்புடையதாகும்.

**நன்மைகள்**

பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புகளைப் பெற உரிமை உண்டு

**வயதெல்லை:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது:**

பல்கலைக்கழக இணையதளத்தில் (services.kin.ac.lk) வெளியிடப்பட்டுள்ள மேலதிக விவரங்களுடன் கூடிய விளம்பரத்தைப் பார்க்கவும் மற்றும் விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்யலாம். பரிந்துரைக்கப்பட்ட படிவங்களில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கடித உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / கல்விசாரா நிறுவனப் பிரிவு, களனி பல்கலைக்கழகம், தலுகம, களனி என்ற முகவரிக்கு 2026 செப்டெம்பர் 28ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

மேற்கண்ட அனைத்து பதவிகளுக்கும் அல்லது பேரவையின் திருப்திப்படுத்தப்படும் காரணத்திற்காக, அபேட்சகர்களை குறும் பட்டியலிடவும் / அல்லது ஆட்சேர்ப்பு செய்யாமல் இருக்கவும் பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு. இது தொடர்பில் பேரவையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யாத, தொடர்புடைய தகுதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படாத, முழுமையற்ற, தெளிவற்ற மற்றும் இறுதித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**களனி.**
2026-09-13

SINCE 2014
Gazette.lk
AMBITIONS REALIZED